# மூன்றாம் சூத்திரம்

## சூத்திர பாடம்

உள(து) இலது) என்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

## கருத்துரை

என்பது சூத்திரம் என் நுதலிற்றோ எனின்; ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று.

*'ஆன்மப் பிரகாசம்' என்பது ஆன்மாவைப் பற்றிய விளக்கம் எனப் பொருள்படும். அவ்விளக்கம் இரண்டு வகையாய் அமையும்.*

1. *ஆன்மா உண்டு என உணர்த்துதல்*
2. *ஆன்மாவினது இலக்கணத்தை உணர்த்துதல்*

*அவ்விரண்டனுள் முதலாவதாகிய, ஆன்மாவுண்டு என்பதனையே இந்த நூற்பாவால் உணர்த்துகிறார் ஆசிரியர்; ஆன்மாவின் இலக்கணத்தை நான்கு, ஏழாம் நூற்பாக்களில் உணர்த்துவார்.*

## இதற்குரிய மாபாடிய விளக்கம்

*முன் சூத்திரத்து அதிகரணங்களில், "ஆன்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்; ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்; ஆன்மாக்கள் மாறிப்பிறந்து வரச் செய்யும்; ஆன்மாக்களுக்குப் புறப் பொருளை உணர்த்துவதாகிய தாதான்மிய சத்தியை உடையன்" எனக் கூறிய முதல்வனது இலக்கணம், 'ஆன்மாக்கள் தனிப்பொருள்களாய் உள்ளன' என்பது பெறப்பட்டாலன்றி நிலை பெறாது ஆகையால், 'ஆன்மாக்கள் அங்ஙனம் உள்ளன' என்பதற்குப் பிரமாணம் கூறி, மேற்கூறிய முதல்வனது இலக்கணத்தை நிலை நாட்டுதற்கு எழுந்தது இச் சூத்திரம் - என்பதாம்.*

*''அவையே தானேயாய்'' என்பது முதலாக மேல் பல இடங்களில் குறிக்கப்பட்ட ஆன்மாக்களது உண்மைக்குப் பிரமாணம் கூறுவதால், முன்சூத்திரத்தை அடுத்து இச்சூத்திரம் நிற்றற்கு உரியதாகின்றது.*

முன் சூத்திரத்து இறுதி அதிகரணத்துள் முடிவாகச் சொல்லப்பட்டது "ஆளாம் நாம் அங்கு" என்பது. அதனுள் "நாம்" எனக் கூறப்பட்ட ஆன்மாக்களின் உண்மை கூறுதலால், சென்ற அதிகரணத்தை யடுத்து இச்சூத்திரத்தன் அதிகரணங்கள் வருதல் பொருத்தமாகின்றது.

சென்ற இரு சூத்திரங்களில் முறையே **பதி உண்மைக்கும், பாசம் உண்மைக்கும் பிரமாணம்** கூறிய பின், இச்சூத்திரம் பசு உண்மைக்குப் பிரமாணம் கூறுவதால், பிரமாண இயலில் நிற்றற்கு உரியதாகின்றது.

ஒரு காரியத்திற்குரிய மூன்று காரணங்களில் நிமித்த காரணம் முதன்மையாதல் பற்றி உலகிற்கு நிமித்த காரணனாகிய பதியது உண்மையை முதலிலும் துணைக் காரணங்களாகிய பாசங்களின் உண்மையை இரண்டாவதுமாகக் கூறி, காரியங்களால் பயன் எய்துகின்ற பசுவினது உண்மையை மூன்றாவதாகக் கூறுகின்றார்.

**சூத்திரத்தின் திரண்ட பொழிப்பு**

''இலது'' என்பது முதலாக வெளிப்படையாகக் கூறப்பட்ட ஆறு ஏதுக்களாலும் "மாயா இயந்திர தனுவினுள்'' என உடம்பொடு புணர்ந்துக் குறிப்பாற் கூறிய ஏதுவாலும், பிற மதத்தினர் கூறுகின்ற 'சூனியம்' முதலியவற்றுக்கு வேறாய் 'ஆன்மா' எனப்படுவது ஒன்றுண்டு என்பதாம்.

**விளக்கம்**

இச்சூத்திரத்தின் இறுதியில் நிற்கும் "ஆன்மா" என்பது சூத்திரத்தின் முதலில் உள்ள "உளது" என்பதனோடு இயைந்து பொருள் தருதலால், இது **பூட்டுவிற் பொருள்கோள்** ஆகும்.

''உளது'' என்னும் ஒருமை, ஆன்மாக்கள் ஆகிய சாதி பற்றி வந்த ஒருமையாகும்.

இறுதியில், "தனுவினுள் ஆன்மா உளது" என ஆன்மாவை எழுவாயாக வைத்துக் கூறினாரேனும், காணப்பட்ட உடம்பைக் கொண்டே காணப்படாத ஆன்மாவை 'உண்டு' எனக் கூற வேண்டி இருத்தலால், 'தனு ஆன்மாவை உடைத்து' எனத் தனுவை எழுவாயாக வைத்து உரைத்தலே ஆசிரியர் கருத்து என்க. இதனை அனுமான வகையால் கூறுமாறு பின்வருவது:-

"காணப்படுகின்ற உடம்பு, சூனியம் முதலியவற்றின் வேறாகிய ஆன்மாவை உடையது' (மேற்கோள்)

அறிதலை உடைமையால், (ஏது)

*யாது யாது ஆன்மாவை உடைத்தன்று, அது அது அறிதலை உடைத்தன்று, குடம் போல" (எடுத்துக்காட்டு)*

*பதி உண்மையை முதற் சூத்திரத்தில் உலகின் மேல் வைத்துக் கூறியதனால் இங்கும் பசு உண்மையை உடம்பின் மேல் வைத்துக் கூறுதலே ஆசிரியர்க்குக் கருத்து என்க.*

*இச்சூத்திரம் ஏழு அதிகரணங்களை உடையது.*

**உயிர் எது என்பதில் கருத்து வேறுபாடு:**

*'உயிர் என்பது யாது?' என வினவினால், 'உணரும் தன்மையுடையது எதுவோ அஃது உயிர்' என விடையிறுக்கலாம். இதனை யாவரும் ஒப்புவர். இதிலே சிக்கல் இல்லை. ஆயின், 'உணரும் தன்மையுடையது எது?' என்று வினவும் போதுதான் அதற்கு விடை கூறுவதில் கருத்து வேறுபாடு உண்டாகிறது. உடம்பு, பொறி முதலிய வெவ்வேறானவற்றைச் சுட்டி, உணர்வுடையதாய் நிற்பது அதுவே யாகலின் அதுவே உயிர் என்கிறார்கள். அவற்றையெல்லாம் மறுத்து உயிர் அவற்றிற்கெல்லாம் வேறாய் உள்ளது என நிறுவுகிறார் ஆசிரியர்.*

*இந்நூற்பாவில் ஏழு வகையான மாறுபட்ட கருத்துக்களை எடுத்துக்கொண்டு மறுக்கின்றார். எட்டாவதாகிய கொள்கையொன்றை அடுத்த நூற்பாவில் மறுப்பார்.*

*மற்றைய சூத்திர அதிகரணங்களைப் போல இச்சூத்திர அதிகரணங்களில் ஒவ்வொரு அதிகரணத்திற்கும் தனித்தனி ஒவ்வொரு மேற்கோள் இல்லை. 'ஆன்மா உளது" என்பது ஒன்றே எல்லா அதிகரணங்களுக்கும் மேற்கோள் ஆகும். ஆகவே, ஏதுகள் ஏழாதல் பற்றியே இச்சூத்திரத்தின் அதிகரணங்களை ஏழாகின்றன. ஒவ்வோர் ஏதுவினாலும் ஒவ்வோர் மதத்தவர் கொள்கையை மறுக்கின்றார். அங்ஙனம் மறுக்கப்படும் மதவாதிகள்*

1) *சூனிய ஆன்மவாதி*
2) *தூல தேகான்ம வாதி*
3) *இந்திரிய ஆன்மவாதி*
4) *சூக்கும தேகான்மவாதி*
5) *பிராணான்ம வாதி*
6) *பிரமான்ம வாதி*
7) *சமூகான்ம வாதி*

*என்போர்,*

இவர் போல **அந்தக் கரண ஆன்ம வாதிகளும்** மறுக்கப்படுதற்கு உரியவர். ஆயினும், அந்தக் கரணங்களின் இயல்பை அடுத்த சூத்திரத்துக் கூற வேண்டி இருத்தலால், அவரை அடுத்த சூத்திரத்தில் மறுப்பார்.

**இந்நூற்பாவில் மறுக்கப்படும் கருத்துக்கள்:**

1) ஆன்மா என்பது சூனியம்
2) பருவுடம்பே ஆன்மா
3) இந்திரியங்களே ஆன்மா
4) சூக்கும தேகமே ஆன்மா
5) பிராண வாயுவே ஆன்மா
6) பிரமமே ஆன்மா
7) அனைத்தும் கூடிய தொகுதியே ஆன்மா

என்பன.

ஆசிரியர் ஏழு கூறுகளாக அமைத்துக் கொண்டு, மேற்கூறிய கருத்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கூறில் வைத்து மறுக்கின்றார்.

**நூற்பாவின் பொருள்:**

1. உடம்பின்கண் உள்ள ஒவ்வோர் உறுப்பையும் பகுத்துப் பகுத்து ஆராய்ந்து பார்த்தும் ஆன்மா இன்னது என அறிய வாராமையால் ஆன்மா சூனியமே என்பர். அங்ஙனம் ஆராய்ந்து ஆன்மா சூனியமே எனக் கூறுகின்ற அறிவு உள்ளதேயன்றோ? அவ்வறிவைச் சூனியம் என்றல் பொருந்தாது. அவ்வறிவே ஆன்மாவாம் என்கிறார் ஆசிரியர்.

2. அறிவு உடம்பிலன்றி வேறிடத்தில் நிகழக் காணாமையால் பருவுடம்பே ஆன்மா என்பர். அதுவும் பொருந்தாது. உடம்பே ஆன்மா எனின், யான் உடம்பு என்று யாரேனும் சொல்லுகிறார்களா? அங்ஙனம் சொல்லும் வழக்கம் எக்காலத்திலும் இல்லை. எனது உடம்பு என உடம்பை உடைமைப் பொருளாகத்தான் சொல்லுகிறோம். இதனால் உடம்பிற்கு வேறாய் யான் எனப்படும் ஆன்மா உண்டு என்பது பெறப்படும்.

3. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளே புலன்களை அறிவன ஆதலின் அவைகளே அறிவாகிய ஆன்மாவாம் என்பர். இதுவும் பொருந்தாது. பொறிகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலனை மட்டுமே அறியும்; ஏனை நான்கு புலன்களை அறியாது நிற்கும். அவை எப்படி

ஆன்மாவாக முடியும்? ஐம்பொறிகளுக்கும் வேறாக இருந்து, அவ்ஐந்தையும் கருவியாகக் கொண்டு நான் கண்டேன், நான் கேட்டேன், நான் சுவைத்தேன் என இவ்வாறு ஐந்து புலன்களையும் அறிவதே ஆன்மாவாம்.

4. இனி, அகத்தே நிற்கும் சூக்கும தேகமே பொறிகளைச் செலுத்திப் புறப்பொருள்களை அறியும்; அதனால் அந்தச் சூக்கும தேகமே ஆன்மாவாம் என்பர். அவரது கூற்றும் பொருந்தாது. ஒருவன் சற்றுமுன் கண்ட ஒன்றை இப்பொழுது தெளிவாக நினைவு கூர்ந்து சொல்லுகிறான். அதில், அவனுக்குக் குழப்பமில்லை. சூக்கும தேகமே ஆன்மாவாயின் கனவை அறிந்த அதுவே விழித்த பின்பு அதனை மீள நினைவு கூர்கிறது. அங்ஙனமாயின் சற்று முன் கனவிற் கண்டதைக் கண்டவாறே தெளிவாய் அறிதல் வேண்டுமன்றிக் குழப்பாக அறிதல் கூடாது. ஆனால் அன்றாட அனுபவத்தில் விழித்தெழுந்த பின் கனவு கண்டோமா இல்லையா, கனவில் இப்படிக் கண்டோமா அப்படிக் கண்டோமா என்றெல்லாம் குழம்பி அறிகிற நிலையே உள்ளது. இதனால் சூக்கும தேகம் ஆன்மா அன்று என்பது விளங்கும்.

சூக்கும தேகத்திற்கு வேறாய் இருந்து அறிகின்ற மற்றொன்று உள்ளது. அதுவே விழிப்பு நிலையில் தூல தேகத்தில் நின்று புறத்து நிகழ்ச்சிகளை அறிகிறது. அத்தேகம் செயலற்றுப் போனபோது அகத்தே சூக்கும தேகத்தைப் பொருந்திக் கனவு நிலையில் அகத்து நிகழ்ச்சிகளை அறிகிறது. பின் விழிப்பு வந்த காலை அது சூக்கும தேகத்தை விட்டு மீண்டும் தூலதேகத்திற்கு வருகிறது. இவ்வாறு இந்த இரண்டு உடம்பிற்கும் வேறாகிய ஆன்மாவே ஒருடம்பை விட்டு மற்றோர் உடம்பைப் பற்றும்போது அந்த மாற்றத்தால் அத்தகைய குழப்பத்தை அடைகிறது. இதனால் ஆன்மா சூக்கும தேகத்தின் வேறாய் உள்ளது என்பது விளங்கும்.

5. பிராணவாயு (மூச்சுக்கூற்று) வெளிச் சென்றும் உட்புகுந்தும் தொழிற்பட்டு ஏனைக் கருவிகளை இயக்கி அறியும் ஆகலின் அதுவே ஆன்மாவாம் என்பர். இதுவும் பொருந்தாத கூற்றே.

உறங்காதபொழுது புலன் நுகர்ச்சியும், உடம்பின் செயற்பாடும் நிகழ்கின்றன. அதற்குக் காரணம், கண் செவி முதலிய அறிகருவிகளும், வாக்கு பாதம் முதலிய செயற்கருவிகளும் இயங்குவதேயாகும். ஆனால் உறக்கத்தில் இவ்விருவகைக் கருவிகளும் இயங்காத காரணத்தால் புலனுகர்ச்சியும், உடம்பின் செயற்பாடும் இல்லையாகின்றன.

விழிப்பு நிலையில் அக்கருவிகளை இயக்கி நிற்பதும், உறக்கத்தில் அவற்றை இயக்காது மடிந்திருப்பதும் ஆகிய ஒன்று உள்ளது என்பது இதனால் விளங்குகிறது.

*அந்த ஒன்று எது? அது பிராண வாயுவாக இருக்க முடியாது. ஏனென்றால், அதுதான் விழிப்பு, உறக்கம் ஆகிய எல்லா நிலையிலும் இயங்கிக் கொண்டிருக்கிறதே; ஒருபோதும் மடிந்திருப்பதில்லையே.*

*பிராணவாயு உறக்கத்திலும் சலியாது இயங்கிக் கொண்டிருக்கும்பொழுது கருவிகள் மட்டும் இயக்கமின்றி மடிந்திருக்கின்றன. பிராண வாயுவே ஆன்மாவாகிய தலைவன் என்றால், தலைவன் இயங்கிக் கொண்டிருக்க அத்தலைவனுக்குக் கீழ்ப்பட்ட கருவிகள் இப்படி மடிந்திருக்குமா? பிராணவாயு தலைவன் இல்லை என்பதை இதுவே காட்டவில்லையா?*

*எனவே உறங்காதபோது கருவிகளை இயக்கி நிற்பதும், உறக்கத்தில் அவற்றை இயக்காது மடிந்திருப்பதும் ஆகிய ஆன்மா பிராணவாயுவுக்கு வேறான ஒன்று என்பது தெளிவாகும்.*

6. *இனி அறிவாய் நிற்பது பிரமம் ஆதலின் அதனையே ஆன்மா என்றல் நிரம்பும் என ஏகான்மவாதிகள் கூறுவர். ஆன்மாவினது அறியும் தன்மைக்கும் பிரமத்தின் அறிவுநிலைக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்காட்டி, ஆன்மா பிரமத்தின் வேறாய் உள்ளது என நிறுவுகிறார் ஆசிரியர்.*

*ஆன்மா இயல்பிலே அறிவுடையதாயினும் எதனையும் தானே அறிய மாட்டாத தன்மையையுடையது, எப்பொருளை அறிவதற்கும் அதற்கு ஒரு துணை வேண்டும். துணைப் பொருள் அறிவிக்கவே ஆன்மா அறிவதாகும். துணையாகிய கருவிகள் உணர்த்தவே ஆன்மா உலகப் பொருள்களை உணர்கிறது; நல்லாசிரியரின் துணையைப் பெற்று அவர் அறிவுறுத்தியபோதே மெய்ப்பொருளை உணரவல்லதாகிறது. பிரமமே ஆன்மாவாயின், பிரமம் அறிவிக்கும் துணையைப் பெற்றே அறியும் என்றல்லவா ஆகிறது? இஃது எவ்வாற்றானும் பொருந்தாது. எனவே, அறிவித்தாலன்றி அறிய மாட்டாத ஆன்மா எல்லாவற்றையும் தானே அறிந்து நிற்கும் அப் பிரமத்தின் வேறாய் உள்ளது என்பது பெறப்படும்.*

7. *இனி, அனைத்துக் கருவிகளும் கூடிய கூட்டமே ஆன்மா என்பர் சிலர். அவர் கூற்றும் பொருந்தாது. கருவிகள் எல்லாம் சேர்ந்த தொகுதி உடம்பு ஆகுமே யன்றி ஆன்மாவாகாது. உடம்பு ஓர் இயந்திரம் போன்றது. உடம்பிலுள்ள கருவிகள் அவ்வியந்திரத்தின் உறுப்புக்கள் போன்றவை. உறுப்புக்கள் சீரான நிலையில் இருந்தாலும் இயந்திரம் தானே இயங்காது. அதனை இயக்குவோன் வேறாக இருந்து இயக்கவே இயங்கும். அதுபோல, உடம்பும் தன்னை இயக்குவதாகிய ஆன்மா வேறாக இருந்து செலுத்தவே செயற்படும். ஆதலால் உடம்பினுள் நின்று உடம்பை இயக்குகிற அறிவாகிய ஆன்மா சடமாகிய இக்கருவிகளின் கூட்டத்திற்கு வேறாய் உள்ளது என்பது விளங்கும்.*

## முதல் அதிகரணம்

### சூனியான்மவாதி மறுதலை

### ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது.

*(இதன் பொருள்:- 'ஆன்மா உள்ளதன்று; சூனியமே' எனக் கூறுதல் பற்றியே ஆன்மா உண்டென்பது விளங்கும் என்பதாம். எல்லாப் பொருள்களையும் 'சூனியம்' எனக் கூறுபவர், நால்வகைப் பௌத்தருள்* ***மாத்திமிகர்****. எனவே அவரது கொள்கையே இவ்வதிகரணத்தில் கூறப்படுகிறது.*

*(சூத்திரத்திற் கூறப்பட்ட ஏதுவை விளங்கக்கூறும் பொழிப்புரையே இங்கு அதிகரணங்களாக அமைகின்றன).*

### முன்னுரை

*'ஆன்மா இல்லை என்பதே பற்றி அஃது உண்டு என நிலை நாட்டுதல் முயற்கோடு இல்லை என்பதே பற்றி, அஃது உண்டு என நிறுவுதலோடு ஒக்கும் எனச் சூனியான்மவாதிகள் எழுப்பும் தடைக்கு மேற்கூறிய ஏதுவின் பொருளை இனிது விளக்கு முகத்தால் விடை கூறுகின்றார்.*

### பொழிப்புரை

எவற்றினையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

### இதன் விளக்கம்

*'ஆன்மா இல்லை' எனக் கூறுதல், முயற்கோடு முதலியவற்றை இல்லை என்றல் போல்வதன்று. ஏனெனில், முயற்கோடு முதலியவற்றை இல்லை எனக் கூறுபவன் தன்னில் வேறாகிய பொருள்களை இல்லை எனக் கூறுகின்றான். ஆனால், ஆன்மா இல்லை எனக் கூறுபவன் தன்னையே தான் இல்லை எனக் கூறுகின்றான். தானே இல்லாத பொழுது, தன்னை 'இல்லை' என அவன் எவ்வாறு வாதிட முடியும்? இந்தக் கருத்தையே யோகிகள் இங்கு வேறு ஒரு வகையாக விளக்குகின்றார்.*

*'ஆன்மா இல்லை' என வழக்கிடுவோரும் அதற்குரிய காரணத்தைக் கூறாமல் வாளா கூற முடியாது. ஆகவே, அவர் பின்வருமாறு கூறுவர்: "பருவுடம்பு, அதன்கண் உள்ள கண் முதலிய பொருள்கள், அவற்றிற்குப் புலனாகின்ற பொருள்கள், மற்றும் மனம் முதலிய உட்கருவிகள் ஆகியவற்றுள் எதனை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அஃது ஆன்மாவாகத் தோன்றவில்லை. (அதாவது,*

*'ஆன்மா எனப்படுவது அறிதலையுடையதே ஆகையால், மேற்கூறியவற்றுள் ஒன்றேனும் அறிதலை உடையதாகத் தெரியவில்லை' என்பது அவர் கருத்து). அதனால்தான் ஆன்மாவை 'சூனியம்' எனக் கூற வேண்டியுள்ளது'.*

*என இவ்வாறு அவர் கூறுவர். ஆயினும், ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு 'இஃது ஆன்மா அன்று, இஃது ஆன்மா அன்று' எனக் கழித்துக் கொண்டு சென்றதும், முடிவில் 'ஆன்மாச் சூனியம்' என அறுதியிட்டதும் எது? ஓர் அறிவே அன்றோ, அந்த அறிவு உளதாகலின் அதுவே ஆன்மாவாதற்குத் தடை என்னை? அந்த அறிவையும் சூனியம் எனக் கூறினால் அது, "என்னை ஈன்றாள் மலடி" எனக் கூறுவோன் கூற்றுப் போல மாறுகோள் உரையாய் முடியும். அதனால் ''ஆன்மா இல்லை'' எனக் கூறும் அறிவே ஆன்மாவாய், அஃது உள்ளதேயாம்.*

*"அவ்வான்மாவாம்" என்றது முன் சூத்திரத்து முதலதிகரணத்தில் "அத்துவிதம் என்ற சொல்லானே" என "ஆகம அளவையான் நிறுவப்பட்ட ஆன்மாவாம்" என்றபடி.*

*''அதுவே'' என்ற ஏகாரம். ஆன்மா அல்லாத ஏனையவற்றினின்றும் பிரித்தலால், பிரிநிலை.*

## எடுத்துக்காட்டு

### முன்னுரை

*''அவ்வான்மாவாம்'' எனப்பட்ட அந்த அறிவை உடல், பொறி முதலியவற்றினின்றும் வேறாகக் காணுமாறும், அஃது ஆன்மா ஆமாறும் எவ்வாறு? என வினவுவார்க்கு எடுத்துக்காட்டால் விடை கூறி, ஏதுவின் பொருளை உறுதிப்படுத்துகின்றார்.*

### வெண்பா

**16.** அன்றன்(று) எனநின்(று) அனைத்தும் விட்(டு) அஞ்செழுத்தாய்
நின்(று) ஒன்(று) உளது (அ)துவே நீ; அனைத்தும் நின்(று) இன்று
தற்பணம் போல் காட்டலால் சார்மாயை நீ அல்லை;
தற்பரமும் அல்லை; தனி.

### இதன் விளக்கம்

*'விட்ட வழி' என்பது "விட்டு" எனத் திரிந்து நின்றது. "அன்று அன்று என நின்று அனைத்தும் விட்ட வழி" என, மேல் பொழிப்புரையிற் கூறியதனையே*

அனுவதித்துக் கூறியது, ‘அவ்வறிவு இது’ என அதனை ஏனையவற்றினின்றும் பிரித்து உணர்த்துதற் பொருட்டு.

**“அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது”** என்றது, அவ்வறிவுக்கு அடையாளம் கூறியபடி. அதையும் ‘ஆன்மா அன்று’ என நீக்கினால், ‘அவ்வாறு நீக்கியது எது?’ என்னும் வினா நிகழ்ந்து, இவ்வாறே மேலும் மேலும் வரம்பின்றி ஓடும் ஆகையால், அதனை ‘ஆன்மா அன்று’ எனக் கழித்தல் கூடாது என்பதற்கு, “அதுவே நீ” எனத் தேற்றேகாரம் கொடுத்து நிறுவினார்.

(“நீ” என்றது மாணவனை.)

அந்த அறிவு அஞ்செழுத்தாய் நின்று அறிதல் **அடுத்த சூத்திரத்தில் விளக்கப்படும்.**

**பாண்டிப் பெருமாள்** “அன்று அன்று என நின்று, அனைத்தும் விட்டு” என மீட்டுங் கூறியதற்குக் காரணங் கூறாமல் பொருள் மட்டும் எழுதினார். ‘அதனால் கூறியது கூறல்’ என்னும் குற்றம் உண்டாகின்றது என்பது பற்றியும், அஞ்செழுத்தாய் என்பதற்குப் ‘பஞ்ச கலாமந்திரங்களாய்’ என அவர் எழுதியிருப்பது சிறிதும் தொடர்பில்லாதது என்பது பற்றியும் யோகிகள் **“இதற்குப் பிறர் எல்லாம் கூறியது கூறல் என்னும் வழுப்படவும், ஓர் இயைபின்றியும் உரைத்தார்”** எனக் கூறி மறுத்தார். ‘அனைத்தும் ஆய்’ என ஆக்கச் சொல் வருவித்த உரைக்க. (‘ஆய்’ என்பதற்குமுன் கண்ணுருபும் வருவிக்க வேண்டும் என்பது சிற்றுரை. ‘அனைத்தின் கண்ணும் அது அதுவாய் நின்று, அன்று அன்று என விட்ட வழி’ என்பது பொருள்).

**‘தற்பரம்’** என்றது, ‘தனக்கு மேல் உள்ளது’ என்பதாம். “தான்” என்றது ஆன்மாவை. அதற்கு மேல் உள்ளது சிவம். தற்பணம் - கண்ணுக்குக் கண்ணாடி போல.

‘வரம்பின்றி ஓடுமாறு இல்லை; ஏனெனில், மாயேயமும்[1] சிவமும் இருத்தல் மேற்போந்த சூத்திரங்களில் கூறப்பட்டமையால்; அவற்றுள் யாதேனும் ஒன்றே அந்த அறிவை - ஆன்மா அன்று எனக் கழிக்கும்’ எனக் கூறுவாரை மறுத்தற்கு “அனைத்தும் ஆய் நின்று இன்று தற்பணம் போல் காட்டலால், சார்மாயை நீ அல்லை” என்றும், “தற்பரமும் அல்லை” என்றும் ‘தனி’ என்றும் கூறினார்.

---

1. பதிப்புக்களில், ‘‘மாயையும்’’ என்றுள்ளது. சிற்றுரையில் ‘மாயேயமும்’ என்றிருத்தலானும், அதுவே கொள்ளத்தக்கது ஆதலாலும் இங்கு அவ்வாறே கொள்ளப்பட்டது.

*உடல், பொறி முதலிய மாயேயங்கள் கண்ணுக்குக் கண்ணாடி போல உனது அறிவை விளக்குவனவே அன்றி, அவை அறிவாவன அல்ல; சடங்களே. அதனால், அவை அந்த அறிவை 'ஆன்மா அன்று' என அறிந்து கழிக்க மாட்டா.*

*இனிச் சிவம் மாயையைக் கடந்து நின்று, தானே விளங்கி அறிவதாகலின், அது மாயையால் விளங்கி நின்று ஒவ்வொன்றையும் 'ஆன்மா அன்று' எனக் கழித்து வரும் ஆன்மா ஆகாது என்பதும், எனவே, 'மாயேயமும், சிவமும் ஆகிய இவை இரண்டிற்கும் வேறாய் உள்ளது ஆன்மா' என்பதும் இவ்வெண்பாவின் பிற்பகுதியால் கூறப்பட்ட கருத்துக்கள்.*

*இப்பிற்பகுதி* **இனி வரும் அதிகரணங்களுக்கெல்லாம் தோற்றுவாயாதல்** *அவ்வதிகரணங்களால் விளங்கும்.*

*இவ்வதிகரணத்தால்* ***'சூனியம் ஆன்மா அன்று;*** *ஆன்மா அதனின் வேறானதே' என நிறுவப்பட்டது. உயிர் பதிக்கும் பாசத்திற்கும் வேறாகிய மூன்றாவது ஒரு பொருள் என்பது உணர்த்தப்பட்டது.*

முதல் அதிகரணம் முடிந்தது.

## இரண்டாம் அதிகரணம்

### தூல தேகான்மவாதி மறுதலை

### முன்னுரை

*முன் அதிகரணத்தில் சூனியான்மவாதிகளை மறுத்து, 'ஆன்மாச் சூனியம் அன்றாய், அறியும் பொருளாய், பதிக்கும், பாசத்திற்கும் வேறாய் உள்ளது' என நிறுவிய பொழுது, உலகாயதர் 'அறியும் பொருள் உண்டு' என்றல் பொருந்தும். அது நிலம் முதலிய நான்கு பூதங்களின் கலப்பாகிய உடம்பிற்கு வேறானதன்று. ஏனெனில், அவ்வறிவு உடம்பிற்கு வேறாய்க் காணப்படுவதில்லை. நான்கு பூதங்களும் சடமாயினும் அவை ஒன்றாய்க் கலந்த பொழுது அக்கலப்பில் ஓர் அறிவு தோன்றும். அது பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு மூன்றும் கலந்த கலப்பில் முன்பு இல்லாத சிவப்பு நிறம் தோன்றுதல் போல்வது. மேலும் யான் பருத்தேன்; யான் சிறுத்தேன்; யான் மனிதன், யான் பார்ப்பான் - என்றாற் போல உடம்பினையே யாவரும் 'நான்' எனக் கூறுகின்றனர். ஆகலின், ஆன்மா ஆவது உடம்பே' என்பர். அவரது கொள்கையை மறுப்பதே இவ்விரண்டாம் அதிகரணம். முன் அதிகரணத்து இறுதியில் "**சார்மாயை நீ அல்லை**" எனக் கூறியதை நிறுவுவதால் இது, இரண்டாம் அதிகரணமாதல் பொருந்துகின்றது.*

### அதிகரணம்

இனி, எனதுடல் என்றலின் ஆன்மாவுளதென்றது.

### இதன் விளக்கம்

*'ஆன்மா வேறு உளது' என்க.*

*உயிர் உண்டு என்பதற்கு வேறு ஏதுக்களைக் கூறலாமாயினும், 'எதிர்ப் பக்கத்தார் கூறும் உரையைக் கொண்டே அவர்களை மறுத்தல் வேண்டும்' என்னும் முறை பற்றி இவ்வாறு, "எனதுடல் என்றல் பற்றி ஆன்மா உண்டு" எனக் கூறினார்.*

*'யான் பருத்தேன்; யான் சிறுத்தேன்; யான் கரியன்' என இவ்வாறு கூறுதல் உடம்பின் தன்மையை உயிர் மேல் ஏற்றிக் கூறும் உபசார வழக்கேயாகும். அதனை, 'யான் உடம்பு; யான் கை; யான் கால் என இவ்வாறு ஓரிடத்தும் வழங்கக் காணாமையால் அறியலாகும்' என்பது கருத்து.*

*"எனதுடல்" என்பது பிறிதின் கிழமைப் பொருள் ஆகாது, தலை மாத்திரமாய் நிற்கும் இராகுவினிடத்திலும் 'இராகுவினது தலை' எனக் கூறும் ஒற்றுமைக் கிழமை*

*போல ஒற்றுமைக் கிழமை யாகலாமன்றோ? என்னும் ஐயத்திற்கு, எனதுடல் என்னும் ஏதுவை இனிது விளக்குகின்ற பொழிப்புரையால் விடை கூறுகின்றார்.*

## பொழிப்புரை

என்பதி, என்மனை என்றாற் போல என்கை, என்கால் என நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

*'இராகுவினது தலை என்றாற் போல ஒற்றுமைக் கிழமை வழக்கு மிகச் சிறுபான்மையானது, என்பதி, என்மனை என்றாற் போன்ற பிறிதின் கிழமை வழக்கே பெரும்பான்மையானது. அதனால் எனதுடல், எனது கை, எனது கால் என்றாற் போல்வன பிறிதின் கிழமை பற்றிய வழக்காகும் அல்லது ஒற்றுமைக் கிழமை பற்றிய வழக்காகாது' என்பது கருத்து.*

*(இங்கு 'பதி' என்றது கணவனையும், 'மனை' என்றது மனைவியையும் குறிக்கும். 'பதி, மனை' என்பன சொல்லால் அஃறிணையாகலின், ஆறாம் வேற்றுமை விரித்துக் கொள்ளப்படும். நான்காம் வேற்றுமை விரிப்பினும் கிழமைப் பொருட்டேயாம்).*

## எடுத்துக்காட்டு

### முன்னுரை

*'மனைவி கணவனையும், கணவன் மனைவியையும் தம்மின் வேறாகக் காண்டல் போல, உடம்பைத் தம்மின் வேறாகக் காண்பார் ஒருவரும் இல்லை. ஆதலின், எனதுடல் என்பதை, என்பதி, என்மனை என்றாற் போலும் வழக்குடன் ஒப்பிடுதல் எவ்வாறு பொருந்தும்' என்னும் ஐயத்திற்கு எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.*

### வெண்பா

17. எனதென்ற மாட்டின் எனதலா தென்னா(கு)
உனதலா துன்கைகால் யாக்கை – எனதென்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னில்அவை வேறாம் உணர்.

### இதன் விளக்கம்

***உலகாயத மதத்தினர்*** *கூறும் உரைகளைக் கேட்பதற்கு முன் நீ, மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும், மற்றும் பொன், பொருள் முதலியனவுமே உயிர் எனக் கருதியிருந்து, உலகாயதர் உரையைக் கேட்ட பின்பு, 'அவர் எல்லாம்,*

*அல்லது அவை எல்லாம் உயிர் அல்ல; உடம்பே உயிர்' எனக் கொள்கின்றாய் அன்றோ? அது போலத்தான் இப்போது, நீ அல்லாத உன் கை, உன் கால், உன் உடம்பு முதலியவற்றையும், அறிவையும் நீயாகக் கருதுகின்றாய். அவற்றை எல்லாம் நாம் கூறும் உரையைக் கேட்டுச் சிந்தித்தால் அவை நீயாக மாட்டாய்; 'நீ அவை அனைத்தினும் வேறாவை; அதனைச் சிந்தித்து உணர்வாயாக' என்பதாம்.*

*மாட்டு - கிழமை; மாட்டின் - கிழமையைப் போல. இன் - உவம உருபு.*

*''உனதலாது'' என்னும் ஒருமைச் சொல்லைத் தனித்தனிக் கூட்டி "உனதலாததாகிய உன் கை, உனதலாததாகிய உன்கால்; உனதலாததாகிய உன்யாக்கை' என உரைக்க.*

*எனதலாது என்னாது - என்னுடையது அல்லாதது என உணராமல். இதனை முதலில் வைத்து, 'என தென்ற மாட்டின்' என்பதனோடு முடிக்க.*

*(கணவன், மனைவி இவர்களை உயிராக எண்ணுதல் அவர்க்கோர் கேடு வந்த காலத்தில் தாம் இறந்துபடுதல் பற்றியும், பொன், பொருள் முதலியவற்றை உயிராக எண்ணுதல், அவை கெட்ட காலத்தில் உயிர் நீங்குதல் பற்றியும் உணரலாகும்).*

*(இத்துணை அறியாமையுடையவரை உலகாயத மதத்தினர், 'இவைகளோ டெல்லாம் நமக்கு என்ன உறவு உள்ளது? நாம் இருந்தால் வேறு கணவன், மனைவி, பொன், பொருள் முதலியவற்றைத் தேடிக் கொள்ளலாம். ஆகவே, நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முயல்வதே தக்கதாகும்' என்பர். இவரது உரையைக் கேட்ட பின், 'எனது' என்னும் புறப் பொருட்பற்று ஓரளவு நீங்கி, 'யான்' என்னும் அகப்பொருட்பற்று நிற்பதாகும் அது பற்றி அதனை இங்கு எடுத்துக்காட்டினார்.)*

*உடம்பிற்கு வேறாய் உயிர் உள்ளதனை,*

*"உடலின்வே றுயிரேன்? இந்த*
*உடலன்றோ உணர்வ தென்னின்*
*உடல்சவ மான போதும்*
*உடலினுக்(கு) உணர்வுண் டோதான்"[1]*

*என்றாற் போலப் பல வகையிலும் ஆராய்தலே சிந்தித்து உணர்தலாகும்.*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால்* **தூல தேகம் ஆன்மா அன்று**. *ஆன்மா அதனின் வேறாய் உள்ளது என்பது நிறுவப்பட்டது.*

**இரண்டாம் அதிகரணம் முடிந்தது.**

---

*1. சிவஞானசித்தியார் சூத்திரம் - 3.2.*

## மூன்றாம் அதிகரணம்

### இந்திரியான்மவாதி மறுதலை

### முன்னுரை

*முன் அதிகரணத்தில் தூல தேகான்மவாதத்தை, மறுத்து, 'ஆன்மா தூல தேகத்தின் வேறாய் உள்ளது' என நிறுவிய பொழுது,* ***இந்திரியான்ம வாதிகள்*** *(உலகாயதரில் ஒரு சாரார்) 'உடல் சடம் ஆகையால் அதனை - ஆன்மா அன்று - என்றது பொருந்தும். ஆயினும், "அவ்வுடம்பிலுள்ள ஐம்பொறிகளே ஐம்புலன்களை அறிகின்றன" என்பதில் கருத்து வேறுபடுவோர் ஒருவரும் இல்லை. ஆகையால், அந்த ஐம்பொறிகளே ஆன்மாவாகும்' என்பர். அவர் கூற்றை மறுப்பதே இம் மூன்றாம் அதிகரணம்.*

### மேற்கோள்

**இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளதென்றது.**

### இதன் விளக்கம்

*சூத்திரத்தில் "அறிதலின்" என்றதை 'ஐம்புலன் அறிதலின், ஒடுக்கம் அறிதலின்' என இரண்டு ஏதுவாக வைத்து, இரண்டு அதிகரணமாகக் கொள்ள வேண்டும் என்பது இம் மேற் கோளில், "ஐம்புலன் அறிதலின்" என உரைத்தமையால் அறியப்படும்.*

*இதற்கு இவ்வாறு உரை கூறிய யோகிகள் பிறர் உரையைக் கீழ்வருமாறு மறுத்தார். ஆயினும் அவ்வாறு உரைத்தவர் யார் என்பது விளங்கவில்லை.*

*'இஃது அறியாதார் ஐம்புலன் ஒடுக்கம் அறிதலினென ஓரேதுவாக வைத்து, ஐம்புலனை ஆகுபெயராக்கி, ஐம்பொறியின் தொழிற்பாட்டினையும், சொப்பனத்தின் அவை ஒடுங்கியவாற்றினையும் அறிதலின்' என்றுரைப்பாரும், 'ஐம்பொறிகள் கெட்ட வாற்றை, என் விழி குருடாயிற்று, என்காது செவிடாயிற்று - என்றிங்ஙனம் அறிதலின் என்றுரைப்பாருமாயினார். "அங்ஙனமுரைப்பிற் சூக்கும தேகான்மவாதிகளை மறுக்குமாறு பெறப்படாமை யறிக".*

*முன் அதிகரணத்தில் தூல தேகான்மவாதத்தை மறுத்தற்குக் கூறிய 'எனதுடல் என்றலின்' என்னும் ஏதுவே ஐம்பொறி முதலியவைகளையே - ஆன்மா - எனக் கூறும் வாதங்களை மறுத்தற்குப் போதுமாயினும், 'ஐம்பொறி முதலியவைகளை - எனது - என வழங்கும் வழக்கம் சிறுபான்மையே' எனக் கூறுவார் உளராதல்*

*கூடும் என்னும் கருத்தினால் அவ்வாதங்களை மறுத்தற்கு வேறு வேறு ஏதுக்களைக் கூறுவாராய் இங்கு, "ஐம்புலன் அறிதலின்" என்னும் ஏதுவைக் கூறினார்.*

*'ஐம்புலன்களை அறிதல் பற்றியே அவற்றை நாங்கள் ஆன்மா என்கின்றோம் ஆதலின், அதனையே ஏதுவாகக் காட்டி ஐம்பொறிகளை - ஆன்மா அல்ல - என்றல் எப்படிப் பொருந்தும்' என்னும் ஐயத்திற்கு, அவ்வாறு கூறியதன் பொருளை இனிது விளக்குகின்ற பொழிப்புரையால் விடை கூறுகின்றார்.*

### பொழிப்புரை

**ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின், இவ்வைந்தினானும் ஐம்பயனுமறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.**

### இதன் விளக்கம்

*'சத்தம் முதலிய ஐம்புலன்களில் ஒவ்வொரு புலனை மட்டுமே ஒவ்வொரு பொறி அறியும் ஆகையாலும், - ஆன்மா - என்றது தான் ஒன்றே ஐம்புலன்களையும் அறிவதாகையாலும் ஒவ்வொரு புலனையே அறிகின்ற ஐம்பொறிகள் ஐந்து புலனையும் அறிகின்ற ஆன்மா ஆகமாட்டா' என்பது கருத்து.*

*(எனவே, சூத்திரத்தில் "ஐம்புலனறிதலின்" என்றதில், 'ஐம்புலனும்' என்னும் முற்றும்மை தொகுக்கப்பட்டது என்பதாம்.)*

## எடுத்துக்காட்டு

*(இந்திரியங்கள் ஆன்மா அல்ல; அவை வேறாக இருந்து ஆன்மாவை மயக்குகின்றன. ஆன்மா அவற்றின் வேறாக இருந்தும் அதனை உணராமல் அவையே தானாகக் கருதி அவை காட்டும் புலன்களின் வயப்பட்டு மயங்குகின்றது. ஆன்மா தன்னை வேறாகக் கண்டு தனது உண்மையை உணர்தலே ஆன்ம ஞானம் ஆகும்.)*

### முன்னுரை

*'ஐம்பொறிகளில் ஒரு புலனை அறியும் பொறி மற்றைப் புலனை அறியாது என்றல் பொருந்தும். ஆயினும், அது பற்றி ஐம்பொறிகளை, - ஆன்மா அல்ல - என வேண்டா. ஏனெனில், ஓர் உடம்பில் ஐம்பொறிகளாகிய ஐந்து ஆன்மாக்களே உள்ளன எனக் கொள்ளலாம். - ஓர் உடம்பில் ஓர் உயிர் தான் உள்ளது என்பதற்குப் பிரமாணம் என்னை?*

*'அனுபவத்தில் ஒரு பொருளைக் கண்டவனே அதனைத் தீண்ட நினைப்பதாகவும், தீண்டியதாகவும் உணரப்படுதலால் ஓர் உடம்பில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆன்மாக்கள் உள்ளன என்றல் பொருந்துமாறு இல்லை எனின், அவ்வாறு உணரப்படுதல் ஐந்து ஆன்மாக்களும் ஓர் உடம்பிலே இயைந்து நிற்கின்ற ஒற்றுமையினாலாகலாம்' என்னும் ஐயத்திற்கு எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.*

### வெண்பா

**18.** **ஒன்றறிந்த தொன்றறியா தாகி உடல்மன்னி**
**அன்றும் புலனாய்அவ் அஞ்செழுத்தை – ஒன்றறிதல்**
**உள்ளதே யாகில் அதுநீ தனித்தனி கண்(டு)**
**உள்ளல்அவை ஒன்றல்லை; ஓர்.**

### இதன் விளக்கம்

***"ஒன்று"*** *என்றது ஐம்பொறிகளை; அறிந்தது - அறியப்பட்டதாகிய புலன். ஒரு பொறியால் அறியப்படும் புலனை மற்றொரு பொறி அறிதல் இல்லை. அத்தகையதாகிய ஒவ்வொன்றும் ஓர் உடம்பிலேயே பொருந்தி நிற்கின்றன. மன்னுதல் - நிலை பெறுதல். அன்றுதல் - மாறுபடுதல். ஒரு புலன் போல மற்றொரு புலன் இல்லாமையால் "அன்றும் புலன்" என்றார். ஆய்தல் - ஆராய்தல்.*

**இலக்கணக் குறிப்பு**

*"ஆய் அஞ்செழுத்து" என்பது வினைத்தொகை. "அவ்வஞ்செழுத்து" என்பதில் வகரமெய் விகாரத்தால் தொக்கது. அஞ்செழுத்தால் செலுத்தப்பட்ட பொறியை "அஞ்செழுத்து" என்றது ஆகுபெயர். அஃது இருமடி ஆகு பெயராய், ஐம்பொறிகளின் தொழிலை உணர்த்தி நின்றது. இனி, 'புலன்' என்பதை ஆகுபெயராக்கி, 'அஞ்செழுத்தாகிய புலனை' என மொழி மாற்றி, 'அஞ்செழுத்தாய புலன் - அஞ்செழுத்தான் ஆகிய பொறிகளின் தொழில்' என உரைப்பினும் பொருந்தும். "உள்ளல்" என்பதில் ஆன் உருபு விரித்து, 'உள்ளுவன ஆகலான்' என உரைக்க.*

*ஒன்றல்லை - நீ அவற்றுள் ஒன்றல்லை. 'அவற்றின் வேறாவை' என்றபடி.*

*'ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்கின்ற ஐந்து புலன்களையும் அறிவதாகிய அந்த ஐம்பொறிகளின் தொழிலையும் அறிகின்ற ஒரு பொருள் இருத்தலால் அதுவே*

*நீ, அந்த ஐம்பொறிகள் அப்புலன்களில் ஒவ்வொன்றை மட்டுமே அறிதலால் நீ அவற்றுள் ஒன்றல்லை' என்பது இவ்வெண்பாவின் பிற்பகுதியால் கூறப்பட்டது.*

*'ஓர் உடம்பிலே ஐந்து ஆன்மாக்கள் உள்ளன' என்பதை வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும், வேறொரு வகையிலும் அக்கருத்துப் பொருந்தாமை விளங்கும். அஃதாவது, ஆன்மா எனப்படுவது ஐம்புலன்களை அறிவதாக மட்டும் இல்லாமல், அந்த ஐம்புலன்களை அறிகின்ற ஐம்பொறிகளின் தன்மையையும் அறிவதாய் உள்ளது. அஃதாவது, 'கண் உருவத்தைக் காணும்; செவி ஓசையைக் கேட்கும்' என்பன போல அறிவது. கண் உருவத்தைக் காணுமே அன்றி 'யான் காண்பேன்' என உணராது. செவி ஓசையைக் கேட்குமே அன்றி, 'யான் கேட்பேன்' என உணராது. இவ்வாறே மற்றைப் பொறிகளும் ஆகும். காண்டல், கேட்டல் முதலிய தொழில்களையே 'அஞ்செழுத்தான் ஆய தொழில்' என்றார். அத்தொழிலை அறிவது ஐம்பொறிகட்கு வேறாய், ஆறாவதாய் நிற்கும் மற்றொரு பொருள் உண்டு' என்பதே இவ்வெண்பாவில் கூறப்பட்ட சிறப்புப் பொருள்.*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால் **'ஐம்பொறிகள் (இந்திரியங்கள்) ஆன்மா அல்ல;** ஆன்மா அவற்றின் வேறாய் உள்ளது' என்பது நிறுவப்பட்டது.*

*இம்மூன்று அதிகரணங்களாலும் அஞ்சவத்தைகளுள் **சாக்கிராவத்தையில்** நிகழும் நிகழ்சிகளைக் கொண்டு ஆன்மாவின் உண்மை நிறுவப்பட்டது.*

*சாக்கிராவத்தை - விழிப்பு நிலை.*

**மூன்றாம் அதிகரணம் முடிந்தது.**

## நான்காம் அதிகரணம்

### சூக்கும தேகான்ம வாதி மறுதலை

*முன் அதிகரணத்தில் இந்திரியான்மவாதிகளை மறுத்து, 'ஆன்மா அவற்றின் வேறாய் உளது' என நிறுவியபின், **சூக்கும தேகான்ம வாதிகள்,** (இவர்களும் உலகாயதரில் மற்றொரு சாரார்) 'ஐம்பொறிகளின் தொழிற்பாட்டினை அறிவது அவ்வைம் பொறிகட்கு வேறாய் உள்ள ஒன்று' - என்று சொல்லியது உண்மையே, "அந்த ஒன்று சூக்கும தேகமே".*

*"நேச இந்திரியங்கட்கு நிகழறிவு இதனால் காண்டும்"[1] எனச் சித்தாந்தத்திலும் கூறப்படுகின்றது. அதனால், **'புரியட்ட தேகம்' எனப்படுகின்ற சூக்குமதேகமே** ஆன்மாவாகும். அது புறத்தில் வாராது அகத்தில் நின்றே ஐம்பொறிகளைப் புறத்திற்*

*1. சிவஞானசித்தியார் சூத்திரம் - 2.64.*

*செலுத்தி ஐம்புலன்களை அறியும்' என்பர். அவரது கூற்றை மறுத்தற்கு எழுந்ததே இந் நான்காம் அதிகரணம்.*

## மேற்கோள்

**இனி ஒடுக்க மறிதலின் ஆன்மாவுளதென்றது.**

## இதன் விளக்கம்

*இங்கு 'ஒடுக்கம்' என்றது ஐம்பொறிகளின் ஒடுங்கின நிலையாகிய கனவு நிலையை, அஃது அந்நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்தமையால் ஆகுபெயர்.*

*'கனவு நிலையில் நிகழ்வனவற்றை அறிவதும் சூக்கும தேகமே ஆகையால் 'ஒடுக்கம் அறிதலின்' என்னும் ஏது, சூக்கும தேகமே ஆன்மா என்னும் எங்கள் கொள்கையை நிறுவுவதே ஆகும். அதனால், இது* **'சித்த சாதனம்'** *என்னும் குற்றமுடைய ஏதுவாகும்' (சித்த சாதனம் - துணிந்ததனையே துணிதற்குக் கொள்ளப்படும் கருவி) என்னும் ஐயத்திற்கு அவ்வேதுவின் பொருளை இனிது விளக்குகின்ற பொழிப்புரையால் விடை கூறுகின்றார்.*

## பொழிப்புரை

**நனவின்கண் கனவு கண்டாம் என்றும், கண்டிலம் என்றும் நிற்பது உளதாகலின் அதுவே இவ்வான்மாவாம் என்றது.**

## இதன் விளக்கம்

*எனவே, "ஒடுக்கம் அறிதலின்" என்றது. 'ஒடுக்கத்தின்கண் நிகழ்ந்தவற்றை மயங்கி அறிதலின்' என்னும் பொருளையுடையது. அதனால் 'அது சித்த சாதனம் ஆமாறில்லை' என்பதாம்.*

*'கனவில் நிகழ்ந்தவற்றை அறிகின்ற சூக்கும தேகமே ஆன்மா ஆயின், நனவின்கண் அதனை மயங்கி அறிய வேண்டுவதில்லை. தெளிவாகவே அறியும். கனவின்கண் சூக்கும தேகத்தைக் கருவியாகக் கொண்டு அறிவதும், நனவின்கண் தூல தேகத்தைக் கருவியாகக் கொண்டு அறிவதும் அந்த இரு தேகங்கட்கும் வேறாய் உள்ள ஒன்றாகையாலே கருவி வேறுபாட்டால் மயங்கி அறிகின்றது' என்பது கருத்து.*

## எடுத்துக்காட்டு

### முன்னுரை

*ஆன்மா, நனவிலிருந்து கனவிற்குச் செல்லுமாறும், அங்கு நிகழ்ச்சிகள்*

*நிகழுமாறும், மீளவும் ஆன்மா நனவிற்கு வருமாறும் இவை என்பதை விளக்கு முகத்தால் மேற்கூறிய ஏதுவை எடுத்துக்காட்டால் நிறுவுகின்றார்.*

## வெண்பா

19. அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலில் சென்றடங்கி – அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறல் உடல் நீயல்லை மற்று.

## இதன் விளக்கம்

*உயிர்த்தல் - தொழிற்படுதல், - "உயிர்ப்ப" என்றது, 'தொழிற்படுவன வாகிய ஐம்பொறிகள்' என்பதாம். தாம், அசை.*

*'அடங்கி செவ்விதின் அவ்வுடலில் சென்று' என மாற்றி உரைக்க.*

*அவ்வுடலின் வேறொன்று கொண்டு - அந்தத் தூல தேகத்தைப் போல வேறொரு தேகத்தை எடுத்துக் கொண்டு.*

*'முன் அதிகரணத்தில் கூறிய ஐம்பொறிகள் செயலற்றுக் கிடக்க, புறச்செயல்கள் எல்லாம் ஒழிந்து, அந்தத் தூல தேகத்தின் உள்ளே எளிதாகச் சென்று, அது போன்றதாகிய சூக்குமதேகத்தை எடுத்துக் கொண்டு, கண்டும், கேட்டும், பிறவாறும் விளையாடிவிட்டு, மீள அந்தச் சூக்கும தேகத்தை விட்டுத் தூல தேகத்தில் வருதலால், சூக்கும தேகம் அவ்வாறான செயல்களையுடைய ஆன்மா அன்று' என்பது இவ் வெண்பாவால் கூறப்பட்டது.*

### இலக்கணக் குறிப்பு

*உயிர்ப்ப 'அன்' பெறாத அகர ஈற்று அஃறிணைப் பலவின்பால் வினைப்பெயர். 'மீள' என்பது 'மீண்டு' எனத் திரிந்து நின்றது. 'மாறலான் என ஆன் உருபு விரித்துக் கொள்க. மற்று, வினைமாற்று.*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால் '**சூக்கும தேகம் ஆன்மா அன்று**; அதனின் வேறு' என்பது நிறுவப்பட்டது.*

*இவ்வதிகரணத்தில் **சொப்பனத்தில்** நிகழும் நிகழ்ச்சி பற்றி உயிர் உண்மை நிறுவப்பட்டது.*

**நான்காம் அதிகரணம் முடிந்தது**

## ஐந்தாம் அதிகரணம்

### முன்னுரை

*முன் அதிகரணத்தில் சூக்கும தேகான்மவாதிகளை மறுத்து ஆன்மாச் சூக்கும தேகத்தின் வேறாய் உண்டு என நிறுவிய பொழுது, பிராணான்மவாதிகள், (இவரும் உலகாதயரில் மற்றொரு சாரார்) 'சூக்கும தேகம், சொப்பனத்துக்குப் பின் தொழிற்படுதல் இல்லை. அதனால், அதனை, 'ஆன்மா அன்று' என்றது பொருந்தும். பிராண வாயு (மூச்சுக் காற்று) சொப்பனத்திற்குப் பின் சுழுத்தியிலும் தொழிற்பட்டு அறியும்; ஆகையால் அஃதே ஆன்மாவாகும்' என்பர். அவரை மறுத்தற்கு எழுந்ததே இவ்வைந்தாம் அதிகரணம்.*

### மேற்கோள்

**இனிக் கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளதென்றது.**

### இதன் விளக்கம்

*உண்டி வினை - உண்டியும் வினையும்; உம்மைத் தொகை. சிவஞான சித்தியாரிலும் "உண்டியும் வினையும் இன்றிக் கிடந்து"[1] என வந்துள்ளது அறியத்தக்கது. வடமொழி மூன்றாம் சூத்திரத்தில், 'உண்டி இன்மை மட்டுமே கூறப்பட்டதாயினும்[2] இனம் பற்றி வினையின்மையும் உடன் கொள்ளுதல் கருத்து' என்பது இவ்வழி நூலால் இனிது விளங்கும். இஃதறியாதார், 'உண்டியாகிய வினை' எனப் பண்புத்தொகையாக விரிப்பர்.*

*'கண்படை கொண்டவழி (உறங்குங் காலத்தில்) உண்டியும், வினையும் இல்லை' - என்றது உடலுக்கோ, பிராணவாயுக்கோ? உடலுக்கெனின், உடலை ஆன்மா எனக் கொள்ளாமையால் அதற்கு எப்பொழுதும் உண்டியும், வினையும் இல்லையேயாம். பிராணவாயுவுக்கு எனின், உறங்கி எழுந்த பின்பு, - சுகமாய்த் தூங்கினேன் - என அனுபவம் நிகழ்தலால், உறக்கத்தில் சுகம் அனுபவிக்கப்பட்டமை விளங்கும். ஆகவே, - உறக்கத்திலும் அறிவு உண்டு - என்பதும், அப்பொழுது இயங்குவது பிராண வாயுவே ஆகையால் அதுவே நித்திரையின் சுகத்தை அறிவதும், இயங்குதலைச் செய்வதும் ஆதலும் அறியப்படுகின்றன. ஆகவே, - உறக்கத்தில் பிராணவாயுவுக்கு உண்டியும், வினையும் இல்லை - என்றல் 'மாறுகோள் உரையாம்' - என்பர். அக்கூற்றிற்கு மேற்கூறிய ஏதுவை இனிது விளக்குகின்ற பொழிப்புரையால் மறுப்புக் கூறுகின்றார்.*

---

*1. சூத்திரம் 4.30*

*2. "ஸ்வாபே நிர்ப்போக"*

## பொழிப்புரை

**ஒடுங்கினவிடத்து, இன்பத்துன்பம், சீவனம் பிரகிருதிக் கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத் துன்பம், சீவியா நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான் மாவாம் என்றது.**

## இதன் விளக்கம்

*ஒடுங்கின இடத்து - பிராண வாயு தவிர ஏனைய கருவிகள் எல்லாம் ஒடுங்கிய உறக்க நிலையில். இன்பத் துன்பம் - இன்பத் துன்ப நுகர்ச்சி. சீவனம் - இயங்குதல். பிரகிருதி - உடம்பு.*

*'உறக்க நிலையில் புறப் பொருள்களால் வருகின்ற இன்பத் துன்ப நுகர்ச்சிகளும், இயக்கமும் உடம்பின்கண் நிகழாமையாலும், விழிப்பு நிலையில் அவை இரண்டும் உடம்பின்கண் நிகழ்தலாலும், உறக்கம், விழிப்பு என்னும் இரு நிலையிலும் பிராண வாயு ஒருபடித்தாக இயங்கி நிற்கவும் உறக்கத்தில் அவை நிகழாமைக்கும், விழிப்பில் அவை நிகழ்தற்கும் காரணம், உறக்கத்தில் கருவிகளை ஒடுக்கியும், விழிப்பில் ஒடுக்காதும் நிற்கின்ற ஒரு பொருள் அந்தப் பிராண வாயுவுக்கு வேறாய் இருத்தலே என்பது அறியப்படும். ஆகவே, அதுவே ஆன்மாவாம்' என்பது இப்பொழிப்புரையால் கூறப்பட்டது.*

*"இன்பத் துன்பம், சீவனம்" - என்பதற்குப்பின், 'இவ்விரண்டும்' என்னும் தொகை விகாரத்தால் தொக்கது.*

*"சீவியாகி நிற்பது" என்பது 'சீவியா நிற்றல்' எனத் தொழிற் பெயராய் நின்றது.*

> *"உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி*
> *விழிப்பது போலும் பிறப்பு"[1]*

*என்பதில் உள்ள "உறங்குவது, விழிப்பது" - என்பனபோல.*

*"உளது என்னும் ஒருமைச் சொல்லை 'நுகர்ச்சி, சீவனம்' என்னும் இரண்டோடும் தனித்தனிக் கூட்டுக.*

> *("இன்பத் துன்ப நுகர்ச்சியை, - இன்பத்*
> *துன்பம் - என்று உபசரித்தார்" எனச் சிற்றுரையில் உரைத்தார்).*

*'பிரகிருதி' என்பது 'இயற்கை' என்னும் பொருளுடையது. இயற்கையாவது மாற்றம் இல்லாதது. உறக்கத்திலும், விழிப்பிலும் ஒரு தன்மையாய் இருத்தல் பற்றி உடம்பு இங்கு, "பிரகிருதி" எனப்பட்டது.*

---

*1. திருக்குறள் 339*

*'உறக்கத்திலும், விழிப்பிலும் ஒப்ப இயங்குதல் பற்றிப் பிராண வாயுவே இங்கு, - பிரகிருதி - எனப்பட்டது' எனவும், 'இங்கு - பிரகிருதி - எனப்பட்டது பிரகிருதியின் காரியமாகிய சித்தம்' எனவும் உரைப்பாரும் உளர்*[1].

*அவருள் 'சித்தம்' எனக் கொள்வோர், 'சித்தம் சொப்பனத்திற்குப் பின் சுழுத்தியிலும் தொழிற்படுதலால் அதுவே ஆன்மாவாம் - எனக் கூறுகின்ற* **சித்தான்மவாதிகளை** *மறுப்பதே இவ்வதிகரணம்' எனக் கொள்வர்.*

*('சித்தான்ம வாதம் அடுத்த சூத்திரத்தில் மறுக்கப்படுதலால் அவ்வாறு உரைப்பது உரையன்று என்பது யோகிகள் கருத்து.)*

## எடுத்துக்காட்டு

### முன்னுரை

*'பிராணவாயு புறப் பொருள்களை அறிதற்கும், உடம்பை இயக்குதற்கும் அதற்குத் துணையாய் நிற்கும் கருவிகள் உறக்கத்தில் ஒடுங்கிப் போதலால், புறப் பொருளால் வரும் இன்பத் துன்ப நுகர்ச்சியும், இயக்கமும் உடம்பின்கண் இல்லையாகின்றன. விழிப்பில் அக்கருவிகள் ஒடுங்காது செயற்படுதலால் உடம்பின்கண் அவை உளவாகின்றன. ஆகவே அது பற்றிப் பிராண வாயு ஆன்மா, அதற்குத் தடை என்னை' என்னும் ஐயத்திற்கு எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.*

### வெண்பா

**20.** **கண்டறியும் இவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே**
**உண்டிவினை யின்றி உயிர்த்தலால் – கண்டறியும்**
**உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா துடனண்ணில்**
**உள்ளதாம் உண்டிவினை ஊன்.**

### இதன் விளக்கம்

*'ஆன்மாவின் சந்நிதியில் புறப் பொருள்களைக் கண்டறிவதாகிய இவ்வுடல் உண்டியும், வினையும் இன்றி அவற்றைக் காணாதபடி காட்டாய கருவிகள் யாவும் ஒடுங்கியே போகவும், பிராணவாயு ஒடுங்காமல் இயங்குதலால், பொருள்களைக் கண்டறிதற்கு உரிய ஆன்மாப்பிராணவாயு அன்று; அதனின் வேறு உண்டு. அந்த ஆன்மாக் கருவிகளோடும் கூடிற்றாயின் உடல், உண்டியும் வினையும் உடைத்தாம். அதனை நீ ஆய்ந்தறிவாயாக - என்பது இவ்வெண்பாவின் பொருள்.*

---

*1. அவ்வாறு உரைக்கப்பட்ட உரைகள் எவை என்பது தெரியவில்லை.*

*"கண்டறிதல்" என்பது மீமிசைச் சொல்.*

*காட்டு - காட்டுவனவாய கருவிகள். 'ஒடுங்கவும்' என்னும் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அது,*

*"அறிந்திடு முதலியாகின் அது நிற்கக்காரணம் போகா"[1]*

*என வழி நூல் கூறிய அப்பொருளைத் தந்து நின்றது. அஃதாவது 'பிராணவாயுவே கருவிகளைக் கொண்டு அறியும் ஆன்மாவாகிய தலைமைப் பொருளாயின், அது செயற்படுங்காலத்தில் கருவிகள் செயலொழிந்து நிற்க மாட்டா' என்பது.*

*'காணாதே காட்டு ஒடுங்க' என மொழிமாற்றி உரைக்க.*

*'இல்லையாக' என்பது "இன்றி" எனத் திரிந்து நின்றது. உயிர்த்தல் - பிராணவாயு இயங்குதல்.*

**இலக்கணக் குறிப்பு**

*"உண்டு" என்பது உண்மைத்தன்மையை உணர்த்தும் குறிப்பு வினைமுற்று. "ஆய்" என்றது முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று. உடம்பை "ஊன்" என்றது ஆகுபெயர்.*

*'ஆன்மா, பிராணவாயுவின் வேறு' என்பதனை வலியுறுத்தற்கு, "ஒடுங்காது உடன் நண்ணில் உள்ளதாம் உண்டி வினை ஊன்" என உடம்பாட்டினாலும் கூறினார்.*

*(சிற்றுரையில் உரைக்கப்பட்ட பொருள் இங்கு உரைக்கப்பட்டதிலிருந்து சிறிது சிறிது வேறுபட்டுள்ளது).*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால் 'பிராணவாயு ஆன்மா அன்று, அதனின் வேறு என்பது நிறுவப்பட்டது. இதனுள்* **சுழுத்தி துரியங்களில்** *நிகழும் நிகழ்ச்சிபற்றி ஆன்மாவின் உண்மை நிறுவப்பட்டது.*

*இரண்டாம் அதிகரணம் முதலாக இதுகாறும் முதல் அதிகரணத்தில் "சார் மாயை நீயல்லை" என்றது விளக்கப்பட்டது.*

**ஐந்தாம் அதிகரணம் முடிந்தது**

---

*1. சிவஞான சித்தியார் சூத்திரம் - 3.4.*

# ஆறாம் அதிகரணம்

## பிரமான்ம வாதி மறுதலை

## முன்னுரை

*முன்னை அதிகரணங்களால் பிராணான்மவாதம் ஈறாகிய மதங்களை மறுத்து, 'அவ்வம் மதங்களின்படி சொல்லப்பட்ட பலவற்றிற்கும் வேறாய் உள்ளது ஆன்மா' என நிறுவிய பொழுது, '**பிரமான்மவாதிகள்,** 'பிறர் எல்லாம் கூறிய பொருள்கள் சடம் ஆகையாலும், பிற காரணங்களாலும் அவற்றை - ஆன்மா அல்ல - என்றது பொருந்தும். பிரமப் பொருள் சித்தாகையால் அதுவே ஆன்மாவாம். - அதனின் வேறாய் - ஆன்மா உண்டு எனில், அதுவும் சித்துப் பொருளாய், இரண்டு சித்துப் பொருள் கொள்ளுதற்குக் காரணம் இன்மையால் - மிகை - என்னும் குற்றமாம்' என்பர். அவர் கூற்றை மறுப்பதே இவ் ஆறாம் அதிகரணம்.*

*பருவுடம்பு, ஐம்பொறி, நுண்ணுடம்பு, பிராண வாயு முதலிய யாவும் அறிவற்ற சடம் ஆதலின் அவற்றுள் ஒவ்வொன்றை ஆன்மா என்றல் பொருந்தாது. ஆயின் 'பரம்பொருளாகிய பிரமம் அறிவாய் நிற்பது ஆதலின் அதுவே ஆன்மாவாம்' என்பர்.*

*'பிரமமே ஆன்மா' என்னும் அவர் கூற்று 'பிரமான்ம வாதம்' எனப்படும். பிரமம் பேரறிவு எனக் கூறி, அவ்வறிவே ஆன்மா என்பதனால் 'விஞ்ஞானான்ம வாதம்' என்றும் சொல்லப் பெறும். விஞ்ஞானம் - பேரறிவு; அவ்வாதத்தை இவ் ஆறாம் கூறில் மறுக்கின்றார் ஆசிரியர்.*

## மேற்கோள்

**இனி உணர்த்த உணர்தலின் ஆன்மா உளதென்றது.**

*உணர்த்த உணர்தலின் - தொழிற்படுங் கருவிகளில் ஒன்றும் இன்றி எல்லாம் ஒடுங்கிய துரியாதீத நிலையில் சிறிதும் அறிவின்றிக் கிடந்து, பின்னர் அக்கருவிகள் கலை முதல் ஒவ்வொன்றாக வந்து பொருந்தி அறிவிக்க அறிந்து வருதலால் அத்தகைய ஆன்மா, எக்காலத்தும் அறியாமையுட்படாது, அறிவாகியே நிற்கின்ற பிரமமாதல் இயலாது. ஆகையால், 'ஆன்மாப் பிரமத்திற்கு வேறாய் உளது' எனக் கொள்ளப்பட்டது.*

**ஐயம்**

*'பிரமம் சித்தாயினும் அவிச்சையுட்பட்ட காலத்தில் கருவிகளோடு கூடியே அறியும்' என அவர் கூறும் தடைக்கு, மேற்கூறிய ஏதுவை இனிது விளக்குகின்ற பொழிப்புரையால் மறுப்புக் கூறுகின்றார்.*

## பொழிப்புரை

**'அவன் அறிந்தாங்கு அறிவன்' என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.**

## இதன் விளக்கம்

*'கருவிகளோடு கூடிய பின்பும் ஆன்மா விடயங்களை அறிதல் இன்றி, இறைவனது இயல்பை அறிதல் இல்லை. ஆனால், இறைவனது இயல்பை ஆசிரியன் வேதாகமங்களிற் கூறப்பட்டவற்றை எடுத்து "இறைவன் உன்னைப் போல மறந்தும் நினைந்தும், மீள மறந்தும் நினைந்தும் இவ்வாறு மாறி மாறி அறிதல் இன்றி, எஞ்ஞான்றும் ஒரே நிலையாய் அறிந்து நிற்கும் இயல்புடையவன்" எனக் கூறி உபதேசிக்க, அவ்வுபதேச மொழியைப் பெற்று அறிவு விளங்கப்பெறுகின்ற ஒன்று உளதாகையாலும், அதனைப் 'பிரமம்' என்றல் கூடாமையாலும், உபதேசத்தால் அறிவு விளங்கப் பெறுகின்ற அதுவே வேதாகமங்களிற் சொல்லப்பட்ட ஆன்மாவாம்' என்றபடி.*

*"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"[1]*

*என்னும் திருக்குறளில் "எண்ணியாங்கு எய்துதல்" என்பது 'எண்ணியபடி அடைதல்' எனப் பொருள் தருதல் போல, இங்கு "அறிந்தாங்கு அறிவன்" என்பது 'அறிந்தபடி அறிவன்' எனப் பொருள் தந்தது.*

*இவ்விடத்தில் யோகிகள்,*

*"இதற்குப் பிறவாறும் உரைப்ப; அவை எல்லாம் ஈண்டைக்குப் பொருந்தாமை ஓர்ந்து உணர்க" என உரைத்தார். அங்ஙனம் உரைக்கப்பட்ட உரைகள் தெரிந்தில.*

## எடுத்துக்காட்டு

## முன்னுரை

*'கருவிகளோடு கூடிய பொழுதும் அவிச்சை (அஞ்ஞானம்) முழுதும் நீங்காமையால் அந்நிலையில் பிரமம் விடயங்களை மட்டுமே அறியுமன்றித் தன் இயல்பைத் தான் அறியாது. அதனை ஓராசிரியன் அறிவிக்கவே அறியும்' என அவர் கூறும் தடைக்கு எடுத்துக் காட்டால் மறுப்புக் கூறுகின்றார்.*

*அல்லது*

*'அவன் அறிந்தாங்கு அறியுமாறும். இது (ஆன்மா) மறந்து மறந்து*

---

*1. திருக்குறள் - 666.*

*அறியுமாறும் விளங்கக் கூறிப் பொழிப்புரையிற் கூறிய பொருளை எடுத்துக் காட்டால் வலியுறுத்துகின்றார்' எனக் கொள்ளுதலும் பொருந்தும்.*

## வெண்பா

21. அறிந்தும், அறிவதே யாயும், அறியா(து)
அறிந்ததையும் விட்டங் கடங்கி – அறிந்தது
எது ? அறிவும் அன்றாகும்; மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் என்னும் அகம்.

## இதன் விளக்கம்

***அறிந்தும் அறிவதேயாயும்*** *- (கருவிகளோடு கூடி சாக்கிராவத்தையில் நின்று விடயங்களை அறியும் போதும் எல்லாவற்றையும் ஒருங்கே அறிய மாட்டாது) ஒன்றை அறிந்தும், அதன் பின்பு மற்றொன்றை அறிய முயன்றும்;* ***அறியாது*** *- முன் அறிந்ததை அறியாமல் மறந்தும் இங்ஙனம் ஒவ்வொன்றாகவே ஆன்மா அறிந்து வருகின்றது. இனி,* ***அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி அறிந்தது எது*** *- ஒரு காலத்தில் அறிகின்ற அந்தப் பொருளையும் இடைவிடாது அறிதல் இன்றி, விட்டுவிட்டே அறிந்து, அதனால் அஞ்சவத்தைப்பட்டு அவற்றுள் அடங்கி நின்று, இவ்வாறு அறிந்து வருவது எந்தப் பொருள்?* ***அறிவும் அன்றாகும்*** *- 'அது சடம் அன்று' என்பது மேல் பல விடத்தும் விளக்கப்பட்டது. இனியும் விளக்கப்படும். ஆகவே, அதனை 'பேரறிவுப் பொருள்' என்னலாமோ எனின், எல்லாவற்றையும் ஒருங்கு உணர்வதே பேரறிவாகையால் அத்தகைய பேரறிவுப் பொருளும் அன்றாம். ஆகவே, மெய்கண்டான் ஒன்றின் உண்மை மெய்ந்நெறியாகிய சித்தாந்த நெறியை அத்தகையதாக உணர்ந்தவன் மேற்கூறிய பொருளை, வேறு ஏதுவாதல் கூடும் என மனம் ஒருங்கிச் சிந்திப்பானாயின்,* ***அது அதுதான் என்னும் அகம்*** *- அந்த அந்தப் பொருளிலும்தான் அதுவேயாய் அழுந்திச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பினையுடைய ஒரு தனிப் பொருளாகிய உள்ளமாம் (ஆன்மாவாம்).*

*"அங்கு" என்றது உணர்த்தும்* ***முறைமைத் தானம்*** *ஆகிய இலாடத்தானத்தை யாம்.*

*அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி அறியுமாறு* ***அடுத்த சூத்திரத்தின் இறுதி அதிகரணத்திலும்****, அது அதுதான் எனச் சார்ந்ததன் வண்ணம் ஆமாறு உண்மையதிகாரத்தில் ஏழாம்* ***சூத்திரத்திலும்*** *விளக்கப்படும்.*

**இலக்கணக் குறிப்பு**

*"அறிந்து, அறிவதேயாயும்" என்றவற்றிற்கு ஏற்ப 'அறியாதும்' என நின்ற எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. "அறிந்ததையும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. "அறிவும்" என்னும் உம்மை, 'மேற்கூறிய சடமும் அன்று' என்று இறந்தது தழுவிற்று.*

*"அறிந்தும், அறிவதேயாயும் அறியாது அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி அறிந்தது எது" என்பதற்கு இவ்வாறன்றி, 'ஓதியதனை ஓதிய பொழுதே உணர்ந்தும், பலகால் ஓதி உணர்வதாயும், பலகால் ஓதியும் உணராது அங்ஙனம் உணர்ந்ததனையும் மறந்தும், இவ்வாறு ஓதி உணர்ந்தது எது' என உரைப்பினும் பொருந்தும். இப்பொருட்கு "அடங்கி" என்பதிலும் எண்ணும்மை விரித்தல் வேண்டும்.*

***'இவை எல்லாம் பேரறிவயாகிய பிரமத்திற்கு இருத்தல் ஏலாது'** என்பது கருத்து.*

*'பிரமம் அவிச்சையுட்பட்டது' என்றலும் "அஃது ஓர் ஆசிரியனது உபதேசத்தைப் பெற்றே மெய்யுணர்வைப் பெறும்" என்றலும் - அசம்பாவிதம் - என மறுத்தல் கூடுமாயினும், **"அவ்வளவின் அவன் மகிழ்க"** என்னும் நியாயத்தால் அவைகளையுடன்பட்டுக் கொண்டு, வேறுவேறு வகையில் அவற்றை மறுத்தார்.*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால் **'பிரமம் ஆன்மா அன்று;** ஆன்மா அதனின் வேறு' என்பது நிறுவப்பட்டது.*

*"உணர்த்த உணர்தலின்" என்பதற்கு அதீதத்தில் உணர்த்துதல் எனவும், மெய்யுணர்வை உணர்த்துதல் எனவும், சாக்கிரத்தில் உணர்த்துதல் எனவும் மூன்று வகையாகப் பொருள் கூறினமையால், இங்கு, **கேவல துரியாதீதம், சுத்தம், சகலம்** என்னும் மூன்று அவத்தைகளில் நிகழும் நிகழ்ச்சி பற்றி ஆன்மாவின் உண்மை நிறுவப்பட்டது.*

*முதல் அதிகரணத்தில் "தற்பரமும் அல்லை" என்றது இவ்வதிகரணத்தில் இனிது விளக்கப்பட்டது.*

*கருவிகளோடு கூடி நிற்கும் ஆன்மாவிற்கு அக்கருவிகள் ஒடுங்குதல், எழுச்சியுற்றுச் செயற்படுதல் ஆகிய காரணங்களால் **சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்** என்னும் ஐவகை நிலைகள் உளவாதல், இவ்வதிகரணங்களில் ஒருவாறு குறிக்கப்பட்டது. இவ்வாறாம் அதிகரணம் 'கணபங்கமாகிய ஞானமே*

*ஆன்மா, எனக் கூறும், புத்தரின் ஒரு சாரார் ஆகிய* **யோகாசாரர்** *மதத்தை மறுத்தற்கு எழுந்தது' எனக் கொண்டு அதற்கேற்ப உரை கூறுவாரும் உளர்.*

*இவ்வாறு உரைக்கும் உரையும், 'இது' என்பது தெரியவில்லை.*

*இதுகாறும் விளக்கி வந்த பிரமத்தின் இயல்பையும், ஆன்மாவின் இயல்பையும் பின் வருமாறு நிரல்படுத்தி நினைவிற் கொள்ளலாம்.*

| ***பிரமத்தின் இயல்பு*** | ***ஆன்மாவின் இயல்பு*** |
|---|---|
| *1. தானே அறிவது* | *1. அறிவிக்க அறிவது* |
| *2. ஒருங்கே அறிவது* | *2. ஒவ்வொன்றாகவே அறிவது* |
| *3. இடைவிடாது அறிவது* | *3. விட்டு விட்டு அறிவது* |
| *4. அழுந்தாது அறிவது* | *4. அழுந்தி அறிவது* |

*ஆன்மா விட்டு விட்டு அறிதல் நான்காம் நூற்பாவிலும் அழுந்தி நின்றறிதல் ஏழாம் நூற்பாவிலும் கூறப்படும்.*

*வடமொழியில் உயிரைப் படர்க்கையில் வைத்துக் கூறும் போது 'ஆன்மா' எனவும், தன்மையில் வைத்துக் கூறுங்கால் 'அகம்' எனவும் வழங்குவர். எனவே, தன்மை பற்றி இங்கு உயிரை அகம் என்றார்.*

**ஆறாம் அதிகரணம் முடிந்தது.**

# ஏழாம் அதிகரணம்

## சமூகான்மவாதி மறுதலை

### முன்னுரை

*மேற்கூறிய ஆறு அதிகரணங்களாலும் 'அவரவர் சுட்டிய பொருளுக்கு வேறாய் உள்ளது ஆன்மா' என நிறுவிய பொழுது, **சமூகான்மவாதிகள்**, 'கருவிகள் பலவற்றுள் ஒவ்வொன்றையே - ஆன்மா - என்றல் பொருந்தாது. அனைத்துக் கருவிகளும் கூடிய தொகுதியே ஆன்மாவாகும். ஏனெனில், அவற்றுள் ஒன்று குறையினும் அறிவு நிகழாமையால்' என்பர். அவர் கூற்றை மறுப்பதே இவ்விறுதி அதிகரணம்.*

*சமூகம் 'சமுதாயம்' எனவும் சொல்லப்படும். அதனால், சமூகான்மவாதம் 'சமுதாய ஆன்ம வாதம்' என்றும் சொல்லப்படும். இவ்வாதத்தைக் கூறுபவர் புத்தரில் '**சௌத்திராந்திகர், வைபாடிகர்**' என்னும் வகையினராவர்.*

### மேற்கோள்

**இனி மாயாஇயந்திர தநுவினுள் ஆன்மா உளதென்றது.**

### இதன் விளக்கம்

*மாயா இயந்திரம் - மாயையின் காரியங்களால் கட்டப்பட்டு அமைந்த செயற்கைப் பொருள். தநு - உடம்பு. 'மாயா காரியங்களின் தொகுதியாய் அமைந்த செயற்கைப் பொருளாய்த் தோன்றி அழிகின்ற உடம்பு, தோற்றக் கேடுகள் இன்றி என்றும் உள்ளதாகிய ஆன்மாவாதல் இயலாது' என்பது கருத்து.*

*மேற்கோளில், ஆன்மாவுக்கு இடமாகிய உடம்பினை 'மாயா இயந்திர தனு' என அடைமொழி சேர்த்துக் கூறினார். உடம்பு ஓர் இயந்திரம் போன்றது. இயந்திரத்தில் பல உறுப்புக்கள் அமைந்திருப்பது போல மாயை என்னும் பொருளால் ஆக்கப்பெற்ற இவ்வுடம்பிலும் பல உறுப்புக்கள் பொருந்தியுள்ளன. உறுப்புக்கள் எல்லாம் நல்ல நிலையில் இருந்தால்தான் இயந்திரமும் இயங்கும்; உடம்பும் இயங்கும்.*

*இனி, அனைத்து உறுப்புக்களும் சீராக அமைந்திருந்தாலும் இயந்திரம் தானே ஒரு குறிப்பிட்ட முறையில் இயங்காது. அதனை நெறிப்படுத்திச் செலுத்துவதற்கு இயக்குபவன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவன் இயக்கிய வழியிலே இயந்திரமும் இயங்குவதாகும். அதுபோல உடம்பும் தன்னை இயக்குபவனாகிய உயிர் வேறிருந்து*

*செலுத்த, அந்நெறியிலே இயங்குவதாகும். ஆதலால் அனைத்து உறுப்புக்களின் தொகுதியே ஆன்மா என்றல் பொருந்தாது. அவற்றையெல்லாம் இயக்கி நிற்பதாகிய ஒன்றே ஆன்மாவாம் என உவமையில் வைத்துக் குறிப்பாய் உணர்த்தியுள்ளார் ஆசிரியர்.*

*சமூகான்மவாதிகள் இதனைப் பின்வருமாறு மறுப்பர். 'இயந்திரத்தை இயக்குபவன் ஒருவன் இருத்தல் காட்சியினாலே புலப்படுகிறது. உடம்பை இயக்குவது ஒன்று இருப்பது அவ்வாறு புலப்படவில்லை. அனைத்து உறுப்புக்களின் தொகுதிக்கு வேறாய் ஆன்மா என ஒன்று உண்டு என்று துணிவதற்கு இங்குக் காட்டிய உவமை அமையாது' எனக் கூறுவர். அதுபற்றி வேறோர் ஏதுவை வெளிப்படையாகக் கூறி அவர் கருத்தை மறுக்கின்றார். 'அவைதான் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்' என மேற்காட்டியதே அவ்வெளிப்படை ஏது.*

*அவர்கள் கூறும் அனைத்துறுப்புக்களின் தொகுதியில் உள்ள ஒவ்வொன்றும் வேறு வேறு பெயரைப் பெற்று நிற்கின்றன. அவற்றுள் ஒன்றாயினும் உயிர் என்னும் பெயரைப் பெறவில்லை. ஆதலால் உயிர் என்னும் பொருள் அவை அனைத்திற்கும் வேறாதல் விளங்கும் என்பதாம்.*

*இனி, கருவிகள் காரியங்கள் ஆதலின் அவை நிலைபேறு உடையன அல்ல. ஆதலால் அவை என்றும் உள்ளதாகிய ஆன்மா ஆகமாட்டா என்பதை வலியுறுத்தி எடுத்துக்காட்டுக் கூறுகின்றார்.*

**இலக்கணக் குறிப்பு**

*மாயையின் காரியங்களை "மாயை" என்றது ஆகு பெயர். இகரம் விரித்தல் விகாரம். (தொகைச் சொல்லின் இடையே வடசொற்கள் தமிழில் முதலாகாத எழுத்துக்களையும் முதலாகப் பெற்று வரும் என்பது யோகிகள் கருத்தாகலின், இகரத்தை 'விரித்தல் விகாரம்' என்றார்.)*

*உடம்பில் உள்ள கருவிகளை, "சித்தமும், சித்தப்பகுதியும் ஆகிய அகச் சமுதாயம் ஐந்தன் தொகுதி'' என்பது மேற்கூறிய சௌத்திராந்திகர், வைபாடிகர்களது கொள்கை. அதனால், அவர்கள், 'உடம்பை மாயா காரியங்களால் ஆக்கப்பட்டது என்பது எமக்கு உடன்பாடன்று. ஆகவே, எமக்கு உடன்பாடில்லாத கொள்கையைச் சொல்லி எம் கொள்கைக்குக் கூறும் மறுப்பு நேரிய மறுப்பாகாது" எனத் தடை நிகழ்த்துவர். அத்தடைக்கு ஏதுவால் விடை கூறுகின்றார்.*

### வெண்பா

**22.** கலையாதி மண்அந்தம் காணில்அவை மாயை;
நிலையாவாம்; தீபமே போல – அலையாமல்
ஞானத்தை முன் உணர்ந்து நாடில், அதுதநுவாம்;
தான்அத்தின் வேறாகும் தான்.

### இதன் விளக்கம்

*உடம்பின் பகுதிகளை யார் எப்பெயரால் கூறினும் சித்தாந்தம் அவைகளை கலை முதலாகப் பிருதிவி ஈறாக உள்ள தத்துவங்களாகவே கூறும். 'அவையனைத்தும் மாயா காரியங்களே. அஃது எவ்வாறாயினும், அவை தோன்றி அழியும் அநித்தப் பொருள்களே' என்பதில் உனக்கும் கருத்து வேற்றுமையில்லை. (ஆகவே, அவற்றை நித்தப் பொருளாகிய ஆன்மா என்றல் பொருந்தாது. அது நிற்க.)*

*அக்கருவிகள் அனைத்தும் ஒருங்கு கூடிய சமுதாயத்தின் தோன்றுகின்ற ஞானத்தின் இயல்பை முதலில் மனத்தை அலையாமல் ஒருமைப்படுத்தி ஆராய்ந்தால், அச் சமுதாயம், கண்ணின் ஒளியை விளக்குகின்ற கண்ணாடி போல ஞானம் விளங்குதற்குக் கருவியே அன்றி, அதுதானே ஞானம் ஆகாமை விளங்கும். மேலும், அக் கருவிகள் அனைத்தும் ஒன்று கூடிய போதிலும் அக்கூட்டம், 'உடம்பு' எனப் பெயர் பெறும் அன்றி, உயிர் - எனப் பெயர் பெறுதல் இல்லை. அதனால் உயிர் 'உடம்பு' எனப் பெயர் பெற்ற அத்தொகுதிக்கு வேறாய் உள்ளதேயாம்.*

*'தூலம், சூக்குமம், பரம்' என்னும் மூவகை உடம்பையும் குறித்தற்கு, '**தநு**' எனப் பொதுப்படக் கூறினார். "ஆம்" என்பதை "அந்தம்" என்பதனோடும் கூட்டுக. மாயையின் காரியங்களை "மாயை" என்றது ஆகுபெயர்.*

*"தான் இரண்டில் முன்னது ஆன்மா; பின்னது அசை. அதனில் என்பது "அத்தின்" என மருவிற்று. "இத்தை மெய்யெனக் கருதி"[1] என்பதிற்போல.*

*மூவகை உடம்புகளின் இயல்புகள் இரண்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணப் பாடியத்தில் விளக்கப்பட்டன.*

*இவ்வதிகரணத்தால் முதல் அதிகரணத்தில், **"தனி"** என்றது விளக்கப்பட்டது.*

*இவ்வாறு இவ்வதிகரணத்தால், '**கருவிகளின், சமுதாயம் ஆன்மா அன்று;** ஆன்மா அதனின் வேறு' என்பது நிறுவப்பட்டது.*

---

*1. திருவாசகம் - அதிசயப்பத்து*

ஒன்று, இரண்டாம், மூன்றாம் சூத்திரங்களால் முறையே சைவாகமங்களில் சொல்லப்பட்ட **பதி, பாசம், பசு என்றவற்றின் உண்மை, அனுமான** அளவையால் நிறுவப்பட்டது.

ஆகம அளவை உள்ளபொழுது அனுமான அளவை கூறவேண்டுவது என்னை? எனின், மந்த உணர்வு உடையவர்களுக்கு வேற்றுச் சமய நூல்களை உணருங் காலத்தில், சித்தாந்தமாகிய சைவாகமங்களிற் கூறப்பட்ட பொருள்கள் பற்றி ஐயம் நிகழும். அங்ஙனம் நிகழாமைப் பொருட்டும், ஆகமப் பொருள்களும் கேட்டல் மாத்திரையாலன்றி, மேலும் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பவற்றாலே அனுபவம் ஆம் ஆதலின் அது பற்றிச் சிந்தனை நிகழ்தற் பொருட்டும் ஆகம அளவையோடு **அனுமான அளவையும்** ஆசிரியன்மார் கூறுவர் என்க.

மூன்றாம் சூத்திரத்தில் கூறப்பட்ட மாறுபட்ட கொள்கைகள், அவற்றின் மறுப்புகள் ஆகியவற்றின் சுருக்கம்.

| மாறுபட்ட கொள்கை | மறுப்பு |
|---|---|
| 1. அனைத்தும் சூனியம்; அதனால் ஆன்மாவும் சூனியம். | 1. அவ்வாறு கூறுகின்ற அறிவு உள்ளது. அதுவே ஆன்மா. |
| 2. அறிவு உடம்பில் நிகழ்தலால் பருவுடம்பே ஆன்மா. | 2. பருவுடம்பை உடைமையாகக் கொண்டு ‘எனது உடல்’ என்று கூறுகின்ற ஒன்று அதற்கு வேறாக உள்ளது. அதுவே ஆன்மா. |
| 3. புறப்பொருள்களை அறிவன ஐம்பொறிகளே யாதலின் அவையே ஆன்மா. | 3. ஐம்பொறிகள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியா; தம் இயல்பையும் தாம் அறியா. அவ்வைந்தினையும் கொண்டு ஐம்புலன்களையும் அறிவதாகிய வேறொன்று உளது. அதுவே ஆன்மா. |
| 4. சூக்கும உடம்பே ஐம்பொறி களைச் செலுத்தி அறியும். அதுவே ஆன்மா. | 4. சூக்கும உடம்பே ஆன்மாவாயின், கனவிற் கண்டதை நனவிலும் தெளிவாக அறிதல் வேண்டும். அவ்வாறு இல்லை ஆதலால் சூக்கும உடம்பு ஆன்மா அன்று. |

| | |
|---|---|
| 5. பிராணவாயுவே ஏனைய கருவி களை இயக்கி அறியும். அதுவே ஆன்மா. | 5. உறக்கத்தில் பிராணவாயு இயங்கிக் கொண்டிருக்க, ஏனைய கருவிகள் செயலற்று மடிந்திருத்தலால் பிராண வாயு ஆன்மா அன்று. |
| 6. அறிவாய் நிற்பது பிரமமே யாதலின் அதனையே ஆன்மா என்றல் அமையும். | 6. கருவிகளின் துணையைக் கொண்டே அறிதலும், ஆசிரியனது அறிவுரையைப் பெற்றே தன்னியல்பை அறிதலும் ஒன்றொன்றாய் அறிதலும், விட்டு விட்டு அறிதலும், அழுந்தி நின்று அறிதலும் ஆகிய இவையெல்லாம் பிரமத்திற்கு ஏலா. அவ்வாறு அறிகின்ற சிற்றுயிராகிய ஆன்மா வேறு உளது. |
| 7. அனைத்துக் கருவிகளின் கூட்டமே ஆன்மா. | 7. அக்கூட்டம் உடம்பு என்றே பெயர் பெறும்; ஆன்மா என்ற பெயர் பெறாது. |

**மூன்றாம் சூத்திரம் முடிந்தது.**

**பிரமாண இயல் முடிந்தது.**